# பொது இடங்களில் தூய்மையை பராமரிக்காத வியாபாரிகளுக்கு — தனிநபர்களுக்கு அபராதம்

கோலாலம்பூர், ஜூலை 7-

தாமான் புக்கிட் அங்கேரிக் பகுதியில் தூய்மை மீறல்களை இலக்காக கொண்டு அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஒரு நடவடிக்கையின் போது 50 வியாபாரிகள் மற்றும் தனிநபர்களுக்கு கோலாலம்பூர் மாநகர மன்றம் (டி.பி.கே.எல்) அபராதம் விதித்தது.

மீண்டும் மீண்டும் நினைவுறுத்தப்பட்ட போதிலும் சுகாதாரத்தையும் சுற்றுச்சூழல் பராமரிப்பும் தொடர்ந்து அலட்சியப்படுத்தி வந்த பலவியாபாரிகள் மற்றும் தனிநபர்களின் பொறுப்பற்ற நடத்தைகளை இலக்காக கொண்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. பொது இடங்களில் பொருட்களை வைப்பது, சாக்கடைகளில் குப்பைக் கூளங்களை போடுவது, பல்வேறு வகையான கழிவுப் பொருட்களை நீரோட்டத்தில் இடையூறு ஏற்படுத்துவது போன்ற குற்றச் செயல்கள் அடையாளம் காணப்பட்டன.

தண்டனை விதிக்கப்படுவதற்காக மட்டும் இந்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை. தூய்மையை பராமரிப்பது அதிகாரிகளின் பொறுப்பு மட்டும் அல்ல என்பதை பற்றி போதிப்பது விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் இதன் நோக்கமாகும் என்று டிபிகேஎல் நேற்று முன்தினம் ஒரு முகநூல் பதிவில் குறிப்பிட்டது. இது ஒரு கூட்டு பொறுப்பாகும். குறிப்பாக பொது இடங்களில் வியாபாரம் செய்யும் வியாபாரிகள் மத்தியில் இது அவசியம் என்று டிபிகேஎல் அறிவுறுத்தியது.

கோலாலம்பூரின் தூய்மையை, ஒழுங்குமுறையை, அனைவரும் வாழ்வதற்கு பொருத்தமானது என்பதை உறுதிப்படுத்த இத்தகைய நடவடிக்கைகள் அடிக்கடி மேற்கொள்ளப்படும் என்று டிபிகேஎல் தெரிவித்தது.